www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

| முதல் திருப்புதல் தேர்வு - 2025 | தேர்வு எண். |
|---|---|

**காலம் : 3.00 மணி** **XII – வரலாறு** **மதிப்பெண் : 90**

பகுதி - 1

**குறிப்பு: 1) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **(20×1=20)**

**2) ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.**

1. இந்தியாவின் முது பெரும் மனிதர் என அழைக்கப்படுபவர்
அ) பாலகங்காதர திலகர் ஆ) M.K. காந்தி
இ) தாதாபாய் நௌரோஜி ஈ) சுபாஷ் சந்திரபோஸ்

2. மாறுபட்ட ஒன்றைத் தேர்வு செய்க.
அ) வில்லியம் ஜோன்ஸ் ஆ) சார்லஸ் வில்கின்ஸ்
இ) மாக்ஸ் முல்லர் ஈ) அரவிந்தகோஷ்

3. சுப்பிரமணிய பாரதி குறித்து பின்வரும் எந்த கூற்று தவறானது?
அ) பாரதி சுதேசமித்திரன் இதழின் துணை ஆசிரியர்
ஆ) பாரதி திலகரின் Temets of New party என்ற நூலை தமிழில் மொழிபெயர்த்தார்
இ) பாரதியின் குருமணி (ஆசிரியர்) சுவாமி விவேகானந்தராவார்

4. பனாரஸ் இந்துப் பல்கலைக்கழகம் யாரால் நிறுவப்பட்டது?
அ) மகாத்மா காந்தியடிகள் ஆ) மதன் மோகன் மாளவியா
இ) திலகர் ஈ) பி.பி. வாடியா

5. கதார் கட்சி யாரால் நிறுவப்பட்டது?
அ) லாலா லஜபதிராய் ஆ) ஏ.சி.மஜீம்தார்
இ) லாலா ஹர்தயாள் ஈ) சங்கர்லால் பாங்கர்

6. இந்தியாவின் மூவர்ணக்கொடி எப்போது ஏற்றப்பட்டது?
அ) டிசம்பர் 31, 1929 ஆ) மார்ச் 12, 1930
இ) ஜனவரி 26, 1930 ஈ) ஜனவரி 26, 1931

7. ஒத்துழையாமை இயக்கம் உள்ளடக்கியவை
அ) பள்ளி மற்றும் கல்லூரிகளைப் புறக்கணித்தல்
ஆ) அரசு வழங்கிய பட்டங்களைத் திருப்பியளித்தல்
இ) உண்ணாவிரதங்கள் கடைப்பிடிப்பதை எதிர்த்தல்
ஈ) அரசுக்கு எதிரான சதிவேலைகளில் ஈடுபடுதல்
அ) அ மற்றும் ஆ ஆ) ஆ மற்றும் இ இ) அ மற்றும் ஈ ஈ) இ மற்றும் ஈ

8. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி எந்த ஆண்டு தொடங்கப்பட்டது?
அ) 1920 ஆ) 1925 இ) 1930 ஈ) 1935

9. கல்கத்தாவில் முதலாவது சணல் ஆலை தொடங்கப்பட்ட ஆண்டு
அ) 1855 ஆ) 1866 இ) 1877 ஈ) 1888

10. இரு நாடு கொள்கையை முதன்முதலில் கொண்டு வந்தவர்
அ) இராஜாஜி ஆ) ராம்சே மெக்டொனால்டு
இ) முகமது இக்பால் ஈ) சர் வாசிர்ஹாசன்

11. இந்திய தேசிய இராணுவப்படை வீரர்கள் சார்பாக நீதிமன்றத்தில் வாதாடியவர் யார்?
அ) ஜவஹர்லால் நேரு ஆ) மோதிலால் நேரு
இ) இராஜாஜி ஈ) சுபாஷ் சந்திரபோஷ்

12. அரசமைப்பு நிர்ணயச் சபையில் குறிக்கோள் தீர்மானங்களைக் கொண்டு வந்தவர்?
அ) இராஜேந்திர பிரசாத் ஆ) ஜவகர்லால் நேரு
இ) வல்லபாய் படேல் ஈ) மௌலானா அபுல்கலாம் ஆசாத்

13. இந்திய அரசாங்கம் ________ வகையான மேம்பாட்டிற்காக உறுதி பூண்டுள்ளது
அ) முதலாளித்துவ ஆ) சமதர்ம இ) தெய்வீக ஈ) தொழிற்சாலை

14. கீழ்க்கண்டவற்றில் எது லியானர்டோ டாவின்சியின் ஓவியம் இல்லை?
அ) வர்ஜின் ஆஃப் தி ராக்ஸ் ஆ) இறுதி விருந்து
இ) மோனாலிசா ஈ) மடோனாவும் குழந்தையும்

15. ***கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைப் பொருத்தி சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.***

| | |
|---|---|
| அ) மைக்கேல் பாரடே | 1) ஆர்க்ரைட் |
| ஆ) எலியாஸ் ஹோவே | 2) ராபர்ட் புல்டன் |
| இ) நீர்ச் சட்டகம் | 3) மின்சாரம் |
| ஈ) நீராவிப்படகு | 4) தையல் இயந்திரம் |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ) | 1 | 3 | 4 | 2 |
| ஆ) | 1 | 4 | 2 | 3 |
| இ) | 3 | 4 | 1 | 2 |
| ஈ) | 3 | 4 | 2 | 1 |

16. "இரு உலகங்களின் நாயகன்" என கொண்டாடப்பட்டவர்
அ) சார்லஸ் ஆல்பிரட் ஆ) பிஸ்மார்க்
இ) மூன்றாம் நெப்போலியன் ஈ) கரிபால்டி

17. முசோலினி ஆசிரியராகப் பணியாற்றிய பத்திரிக்கையின் பெயர் யாது?
அ) அவந்தி ஆ) ப்ராவ்தா இ) மார்க்சிஸ்ட் ஈ) மெய்ன் காம்ப்

18. **கூற்று:** இரண்டாம் உலகப்போரின் காலத்தில் போர்முறைகள் பெரிதும் மாற்றமடைந்திருந்தன
**காரணம்:** அகழிப்போர்முறை ஒதுக்கப்பட்டு விமான குண்டு வீச்சு பிரபலமானது
அ) கூற்று, காரணம் சரி, காரணம் கூற்றை விளக்குகிறது
ஆ) கூற்று, காரணம் சரி, ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை
இ) கூற்று சரி, காரணம் தவறு ஈ) கூற்று தவறு, காரணம் சரி



Scanned with OKEN Scanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

19. "மூன்றாம் உலகம்" எனும் பதத்தை உருவாக்கியவர் ——— ஆவார்
அ) ஆல்பிரட் சாவே ஆ) மார்ஷல் இ) மோலோடோவ் ஈ) ஹாரிட்ரூமன்
20. ஐக்கிய நாடுகள் சபை 1945 அக்டோபர் 24இல் ——— உருவானது
அ) 100 உறுப்பினர்களுடன் ஆ) 72 உறுப்பினர்களுடன்
இ) 51 உறுப்பினர்களுடன் ஈ) 126 உறுப்பினர்களுடன்

பகுதி - 2

*குறிப்பு: ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். (கட்டாய வினா 30)* **(7x2=14)**

21. தொடக்க கால முக்கிய இந்திய தேசியவாதிகளைக் கண்டறிக.
22. மகாதேவ் கோவிந்த் ரானடே சுதேசிக் கொள்கையினை எவ்வாறு விளக்குகிறார்?
23. தேசிய வாதிகளால் "ரௌலட் சட்டம்" ஏன் எதிர்க்கப்பட்டது?
24. "இரண்டாவது லாகூர் சதி" என்றறியப்படும் நிகழ்வு யாது?
25. சிம்லா மாநாட்டின் பேச்சுவார்த்தைகள் ஏன் முறிந்தன?
26. "இணைப்புறுதி ஆவணம்" பற்றி நீவிர் அறிவது யாது?
27. பண்டைய ஆட்சி முறையின் மூன்று எஸ்டேட்டுகளை விவாதி?
28. ரோம்-பெர்லின் அச்சின் உருவாக்கத்திற்கு பின்புலமாக அமையப்பெற்றது எது?
29. ஐ.நா சபையின் நிறைவேற்றப்பட்ட அமைதிக்காக இணைகிறோம் எனும் தீர்மானத்தின் சிறப்பினைக் குறிப்பிடவும்?
30. நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் குறிப்பு வரைக.

பகுதி - 3

*குறிப்பு: ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். (கட்டாய வினா 40)* **(7x3=21)**

31. பிரிட்டிஷ் இந்தியாவில் ஒப்பந்தக் கூலித் தொழிலாளர் முறை எவ்வழியில் ஏற்படுத்தப்பட்டது?
32. கலெக்டர் ஆஷ் ஏன் வாஞ்சிநாதனால் கொல்லப்பட்டார்?
33. ஜாலியன் வாலாபாக் படுகொலை - குறிப்பு வரைக.
34. தென்னிந்தியாவில் தொழிற்சங்கங்களின் வளர்ச்சிக்காக சிங்கார வேலர் ஆற்றிய பங்களிப்புக் குறித்து எழுதுக.
35. இந்திய அரசமைப்பின் தனித்தன்மைகள் யாவை?
36. இந்திய வேளாண்மையின் பின்தங்கிய நிலைக்கான காரணங்கள் யாவை?
37. வர்த்தகப் புரட்சியின் எதிர்மறை விளைவுகள் என்ன?
38. மிக ஆபத்தான U-படகுகள், Q-கப்பல்கள் பற்றி நீவிர் அறிந்தது என்ன?
39. சூயஸ் கால்வாய் சிக்கல் குறித்து எழுதுக.
40. அணிசேரா இயக்கம் (NAM) பற்றி எழுதுக.

பகுதி - 4

*குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.* **(7x5=35)**

41. அ) இந்திய தேசிய காங்கிரசின் நோக்கங்களையும் பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து விடுதலை பெறுவதற்கு ஆரம்ப கால தேசியவாதிகள் அளித்த பங்கினையும் விளக்குக. *(அல்லது)*
ஆ) இந்திய தேசிய இயக்கத்தில் வ.உ.சி யின் பங்கினைப் பற்றி எழுதுக.
42. அ) ஒத்துழையாமை இயக்கத்திலிருந்து சட்ட மறுப்பு இயக்கம் எவ்வழிகளில் மாறுபட்டிருந்தது? *(அல்லது)*
ஆ) பகத்சிங்கின் புரட்சிகர தேசியவாதம் மற்றும் புரட்சிகர நடவடிக்கைகள் எவ்வாறு அவரைத் தூக்கு மேடைக்கு இட்டுச் சென்றது?
43. அ) ஆங்கிலேயரின் பிரித்தாளும் கொள்கை இந்திய தேசியத்தில் ஏற்படுத்திய தாக்கம் என்ன? *(அல்லது)*
ஆ) இந்திய விடுதலை இயக்க வரலாற்றில் கப்பற்படை கலகம் ஒரு சிறப்பான அத்தியாயம் என ஏன் கருதப்படுகிறது?
44. அ) சுதேச அரசுகளை இந்திய ஒன்றியத்துடன் இணைப்பது தொடர்பாக ஏற்பட்ட பிரச்சனைகள் என்ன? அவற்றை எவ்வாறு திறமையாக படேல் மற்றும் நேரு கையாண்டனர் என்பதையும் விளக்குக.
*(அல்லது)*
ஆ) முதல் இரண்டு ஐந்தாண்டு திட்டங்களின் சாதனைகளை மதிப்பிடுக.
45. அ) தொழிற்புரட்சி ஏன் முதலில் இங்கிலாந்தில் தொடங்கிற்று? நவீன சமூகத்தின் மீது அது என்ன தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது?
*(அல்லது)*
ஆ) இத்தாலிய இணைவு எவ்வாறு சாத்தியமாக்கப்பட்டது?
46. அ) "மார்க்ஸ் தீப்பொறியை வழங்கவும், அதை லெனின் தீபமாக ஏற்றினார்" - தெளிவுபடுத்துக. *(அல்லது)*
***ஆ) இந்திய வரைபடத்தில் கீழ்க்கண்ட இடங்களை குறிக்கவும்.***
1) லாகூர் 2) தண்டி 3) அகமதாபாத் 4) வேதாரண்யம் 5) ஹைத்ராபாத்
47. அ) இரண்டாம் உலகப்போர் ஏற்பட ஜெர்மனியும் ஹிட்லரும் எந்த அளவிற்கு காரணமானவர்கள் என்பதனை ஆராய்ந்து கூறுக.
*(அல்லது)*
ஆ) இரண்டாம் உலகப்போரின் நடைபெற்ற ஏதேனும் ஐந்து நிகழ்வுகளுக்கு காலக்கோடு வரைந்து காட்டுக.



Scanned with OKEN Scanner

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com